**பனை அபிவிருத்தி சபையின் - 2013**

பனை அபிவிருத்தி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு மற்றும் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை மேற்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளில் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பனை அபிவிருத்தி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டக் கிரயம் அருவச் சொத்தாக இனங்காணப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ஏற்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 56,571,669 ஏனைய நிதி சொத்தாக மூலதனமாக்கப்பட்டது. மேலும் இக் கிரயத்திற்கான காலக்கழிவு கொள்கை, காலக்கழிவு காலம் மற்றும் இச் செலவினத்திற்கான கணக்கீட்டுத் தீர்வுகள் என்பன வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடர்ந்தும் பாவனையிலுள்ள புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்ட ரூபா 6,263,747 பெறுமதியான மொத்தக் கிரயமுடைய 08 நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாது நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

(இ) காணி மற்றும் கட்டடங்களின் உரிமையாண்மை சபைக்கு இல்லாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 10,414,935 கிரயமுள்ள கட்டிடங்கள் மற்றும் பொருந்திகள் ரூபா 4,877,409 கிரயமுள்ள காரைநகரிலுள்ள கைத்தொழில் கட்டிடத்தொகுதி மற்றும் ரூபா 1,131,225 கிரயமுள்ள நெடுந்தீவில் உள்ள தும்பு உற்பத்தி நிலையம் போன்றவை மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் மூலதனமாக்கப்பட்ட சொத்துக்களிற்கு ரூபா 6,943,241 ஆன திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) பனை விதை நடுதல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட பனை விதை நடுதல் செலவினமான ரூபா 22,188,353 தொகை ஏனைய நிதி சொத்தொன்றாக மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் வருடாந்தம் 20 வீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

(உ) புளியங்குளத்திலுள்ள மாதிரிப் பண்ணைக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடானது ரூபா 94,612 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 165,603 தொகையான கட்டிடங்களுக்குரிய பெறுமானத்தேய்வு தவறுதலாக பெறுமானத்தேய்வு ஒதுக்கல் வாகனங்களின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பேரேட்டுக் கணக்குகளில் காணப்படும் மீதிகளுக்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்குமிடையே ரூபா 29,262,863 ஆன பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | பேரேட்டு கணக்குகளின் படி தொகை | நிதிக்கூற்றுக்களின் படி தொகை | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சம்பளங்கள் | 46,950,988 | 47,239,027 | 288,039 |
| பெறுமானத்தேய்வு (குறிப்பு 01) | 35,846,197 | 11,661,237 | 24,184,960 |
| நானாவித வருமானம் (குறிப்பு 02) | 3,776,532 | 8,566,396 | 4,789,864 |
| | | | 29,262,863 |

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

மூன்றாவது தரப்பினரிடமிருந்து 03 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டிய ரூபா 119,320 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

கீழே ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 34,603,630 | உரித்துறுதிகள் |
| ஊழியர் கடன் மற்றும் முற்பணங்கள் | 756,065 | கடன் கோவைகள் மற்றும் கடன் பதிவேடுகள் |
| வாடகை கொடுப்பனவுகள் | 5,888,012 | விலைமதிப்பீட்டு அறிக்கைகள் |
| தொலைபேசி கட்டணங்கள் | 494,539 | தொலைபேசி அழைப்புக்கான பதிவேடு |
| எரிபொருள் செலவுகள் | 991,900 | பிரயாணம் செய்த அலுவலரின் கையொப்பம், பிரயாணங்களின் நோக்கம். |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) அதிகாரச்சட்டங்கள்

(i) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 12 மற்றும் 14(3) ஆம் பிரிவு

(ii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான அதிகாரச்சட்டத்தின் பகுதி II இற்குரிய 6(2) ஆம் பிரிவு

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

நி.பி 110, 135, 272(2), 350, 371(2) (ஆ), 382, 383, 445, 446, 715, 751(i), 756(3), 756(5), 757(1) (இ), 757(2)(அ) மற்றும் (இ), 850(i), 1010(ஆ), 1644, 1646 மற்றும் 1654(ஆ)

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக்கோவை

XII அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு

(ஈ) 2006 கொள்வனவு வழிகாட்டல்கள்

(i) 05 ஆம் அத்தியாயத்தின் 5.3.5 ஆம் வழிகாட்டல்
(ii) 02 ஆம் அத்தியாயத்தின் 2.6.1 ஆம் வழிகாட்டல்

(உ) சுற்றறிக்கைகள்

(i) 2008 ஆகஸ்ட் இன் 51 ஆம் இலக்க மற்றும் 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்

(ii) 1996 ஏப்ரல் 20 ஆம் திகதிய எம்பீ/6/1/96 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின் 2.4.1 ஆம் பந்தி

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 60,000,000 அரசாங்க மானியத்தை கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 12,578,654 ஆன பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 55,664,000 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் அவ்வருடத்தின் பற்றாக்குறை ரூபா 9,763,832 ஆகக் காணப்பட்டமையால் சபையின் நிதி விளைவுகளில் ரூபா 2,814,822 ஆன மேலுமொரு வீழ்ச்சி காட்டப்படுகின்றது. புரள்வு ரூபா 5 மில்லியனால் குறைவடைந்தும் விநியோக மற்றும் நிர்வாக செலவுகள் ரூபா 8.2 மில்லியனால் அதிகரித்தும் இருந்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்பாட்டு கிரயம் ரூபா 102,037,407 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 54,074,665 ஆளணி வேதனங்களிற்காக ஏற்பட்டிருந்ததுடன் இது மொத்த செலவில் 52 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) நட்டத்தில் இயங்குகின்ற மாதிரிப் பண்ணைகள்**

மீளாய்வாண்டின் போது பின்வரும் ஆறு மாதிரி பண்ணைகள் ரூபா 3,931,593 நட்டத்தில் இயங்கியிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பண்ணையின் பெயர் | மொத்த வருமானம் | மொத்த செயற்பாட்டு செலவினம் | ஆளணி வேதனம் | மொத்த செயற்பாட்டு செலவினத்தில் ஆளணி வேதனத்தின் சதவீதம் | தேறிய நட்டம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % | ரூபா |
| குடத்தாணை | இல்லை | 462,237 | 364,750 | 78 | 462,237 |
| மாமுனை | 1,800 | 573,555 | 303,357 | 53 | 571,755 |
| நெடுந்தீவு | இல்லை | 380,044 | 345,584 | 90 | 380,044 |
| புளியங்குளம் | இல்லை | 700,423 | 448,431 | 64 | 700,423 |
| உருத்திரபுரம் | இல்லை | 98,203 | - | - | 98,203 |
| வீரவில | 190,515 | 1,909,446 | 1,721,121 | 90 | 1,718,931 |
| மொத்தம் | 192,315 | 4,123,908 | 3,183,243 | | 3,931,593 |

(ஆ) விளைவற்ற மாதிரிப்பண்ணைகள்

453 ஏக்கர் மொத்த விஸ்திரணமுள்ள பின்வரும் மூன்று மாதிரிப் பண்ணைகள் எவ்வித விளைவுகளுமற்று காணப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| பண்ணையின் அமைவிடம் | காணியின் விஸ்தீரனம் |
|---|---|
| மாமுனை | 436 |
| கவுதாரிமுனை | 10 |
| அறிவியல் நகர் | 07 |
| மொத்தம் | 453 |

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விற்பனை செய்யப்பட்ட பொருள் விடயங்களிற்கான நியம விற்பனை விலைகள் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அவ் விடயங்கள் பல்வேறு இடங்களில் வேறுபட்ட விலைகளில் விற்கப்பட்டிருந்தன.

(ஆ) வீரவில மாதிரி பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைவினைப் பொருள்களுக்கு திஸ்ஸமஹாராமவில் பாரிய கேள்வி இருந்த போதிலும் வீரவில

மாதிரிப் பண்ணையின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பண்ணையானது அப் பொருட்களை கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இருந்து கொள்வனவு செய்த காரணத்தால் இதனுடைய போக்குவரத்து செலவு அதிகரித்தது.

**4.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையானது ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள ஏற்பாடுகளை கவனத்திற்கொள்ளாது சில உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.

(ஆ) ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும் சம்பள முரண்பாடுகளுக்கான சீராக்கங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் பதவியணியினர் நிலமை கீழே தரப்பட்டுள்ளது.

| நிலை/தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 01 | 01 | |
| மூன்றாம் நிலை | 22 | 17 | 05 | |
| இரண்டாம் நிலை | 89 | 70 | 19 | |
| ஆரம்ப நிலை | 111 | 131 | - | 20 |
| மொத்தம் | 224 | 219 | 25 | 20 |

மிகைப் பதவியணியினருக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் மீளாய்வாண்டு இறுதியளவில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 வாகனங்களின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகனங்களுக்கான திருத்தம் மற்றும் பராமரிப்புக்காக ரூபா 1,037,790 தொகை செலவிடப்பட்டது எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் திருத்தங்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்காக சம்பவக் குறிப்பு புத்தகம் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரயாணம் செய்த 97,791 கிலோ மீட்டர்களுக்குரிய பயணத்தின் நோக்கமானது 5 வாகனங்களின் ஒட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நான்கு வாகனங்களை பயன்படுத்திய அலுவலர்கள் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ஈ) 1990 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவு ஒரு உள்ளக கணக்காய்வாளருடன் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் பிரிவினுடைய செயற்திறனான செயற்பாட்டிற்காக வேறு உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

சபையானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை தாபித்திருந்ததுடன் இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் 2013 இல் நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2005 யூலை 01 ஆந் திகதிய பிஈடி/31 ஆம் இலக்க பொது நிறுவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க ஒரு வருடத்திற்கு குறைந்தது நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

### 5.3 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான போது பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது காட்டப்படுகின்றது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சில பாரிய முரண்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | பாதிக்கப்பட்ட தொகை | உள்ளபடியானது | முரண்கள் | |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | | | | |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | % |
| ஆளணி வேதனங்கள் | 71,568 | 54,074 | 17,494 | 24 |
| பிரயாணச் செலவினம் | 2,310 | 1,148 | 1,162 | 47 |
| வழங்கல்கள் | 24,950 | 18,211 | 6,739 | 27 |
| ஒப்பந்த சேவைகள் | 12,189 | 8,428 | 3,761 | 30 |
| **மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல்** | | | | |
| வாகனம் | இல்லை | 47 | (47) | 100 |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | இல்லை | 494 | 498 | 100 |
| கட்டிடங்கள் | இல்லை | 8,871 | 8,871 | 100 |
| கருவிகள் மற்றும் இயந்திரங்கள் | இல்லை | 3,118 | 3,118 | 100 |

### 5.4 ஆண்டறிக்கையை பாராளமன்றத்தில் முன்வைத்தல்

நிதி அதிகாரசட்டத்தின் 14(3) பிரிவின் படி 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 22 திசெம்பர் 2014 வரை பாராளமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் மீது விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பெற வேண்டியவை
(இ) நிதிகளின் பயன்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) மனிதவள முகாமைத்துவம்
(ஊ) வாகனங்களின் பயன்பாடு
(எ) பாதீட்டு கட்டுப்பாடு